இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்களிற்கான பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

மட்டம் - 05

**LLU5810** - காணிச்சட்டம்

காலம் : ஒரு (01) மணித்தியாலம்

திகதி : 01.12.2023 நேரம்: பி.ப. 03.30 – பி.ப 04.30

**வினாக்களின் எண்ணிக்கை - இரண்டு (02)**
**ஒரு (01) வினாவிற்கு மாத்திரம் விடையளிக்குக.**
**தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

01. லதா எனும் கொழும்பில் வசிக்கும் திருமணமான பெண் ஒருவர் சிகிரியாவில் ‘குருண்டுகஹலந்த’ என்று அழைக்கப்படும் காணித்துண்டு ஒன்றை சொந்தமாகக் கொண்டிருந்தார். 2012 இன் டிசம்பரில் அவளது அயலவரான ரவி என்பவர் முழுக்காணியன் உடைமைக்குள்ளும் வலுக்கட்டாயமாக பிரவேசித்தான். அயலில் உள்ள காணிகளின் சொந்தக்காரர்கள் எழுத்திலும், தொலைபேசியிலும் தெரிவித்ததன் மூலம் ரவியின் ஆக்கிரமிப்பை லதா அறிந்தாள். 2013 இன் பெப்ரவரியில் லதா, ரவி அக்காணியை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் எனக் கோரினாள். ‘குருண்டுகஹலந்த’ இனை விட்டு வெளியேற தொடர்ச்சியாக லதா கோரிய போதும் ரவி அக்காணியில் சோளத்தை பயிரிட்டும், வருமானத்தை திரட்டியும் தொடர்ந்தும் ஆக்கிரமித்திருந்தான். 2017இன் ஏப்ரலில் லதாவின் சட்டத்தரணி ரவிக்கு ஒரு எழுத்திலான அறிவித்தலை மறுபடியும் அனுப்பிய போதும், அவன் அக்காணியின் உடைமையில் தொடர்ந்தும் இருந்தான். மேலும் அவன் ஒரு சிறிய வீட்டைக் கட்டி, காணியில் சில திருத்தங்களையும் ஏற்படுத்தினான். லதா காணியை விற்பனை செய்து 2023 இன் டிசம்பர் மாதத்தில் வெளிநாடு செல்ல திட்டமிட்டிருக்கிறாள்.

   i) ‘குருண்டு கஹலந்த’ இற்கு ஆட்சியுரிமை கோர ரவி விரும்புகிறான். அவனிற்கு அறிவுறுத்துக. உமது விடையை பொருத்தமான எடுத்துக்காட்டுக்களால் ஆதாரப்படுத்துக.

   **(13 புள்ளிகள்)**

   ii) 2014 இலிருந்து 2019 வரை லதா வெளிநாட்டில் வசித்திருப்பின், மேலே (1) பாகத்தில் நீர் அளித்த விடை வேறுபடக் கூடுமா? **(07 புள்ளிகள்)**

**(மொத்தம் 13+07=20 புள்ளிகள்)**

02. “23 ஆம் இலக்க 1927 ஆம் ஆண்டின் ஆவணப்பதிவு கட்டணம் சட்டத்தின் பிரிவு 7 (1) ஆனது பதிவு செய்யப்படாத ஆவணங்களை விட பதிவு செய்யப்பட்ட ஆணங்களிற்கே முன்னுரிமை வழங்குகிறது”. மேற்குறிப்பிட்ட கூற்றுடன் நீர் இணங்குகிறீரா?

   மேற்தரப்பட்டுள்ள கூற்றின் அடிப்படையில் கீழே தரப்பட்டுள்ள வினாக்களிற்கு விடையளிக்கவும்.

   (1) முன்னுரிமையைக் கோருவதற்கு நிருபிக்கப்பட வேண்டிய அடிப்படைத் தேவைப்பாடுகளை சுருக்கமாக விளக்குக.

   **(08 புள்ளிகள்)**

   (2) எந்த அடிப்படைகளின் கீழ் முன்னுரிமை இல்லாது போகும் என ஆவணப்பதிவு கட்டளைச் சட்டத்தின் பொருத்தமான உறுப்புரைகள் மற்றும் தீர்ப்புச் சட்டங்கள் என்பவற்றின் கீழ் சுருக்கமாக விளக்குக.

   **(12 புள்ளிகள்)**

- முழுப்பதிப்புரிமையுடையது-